**Dated : 18.09.2025**

**O.S.No. 475/2022**

**PW.1 – திரு. சென்னகேசவன்**

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் துணி வியாபாரம் செய்கிறேன். நான் வெங்கடேஷ்வரா டெக்ஸ்டைல் என்ற கடை வைத்துள்ளேன். எத்தனை வருட காலங்களாக நான் கடை வைத்துள்ளேன் என்றால் 15 வருட காலங்களாக நடத்தி வருகிறேன். நான் அதற்கான வருவமா வரி செலுத்துகிறேனா என்றால் செலுத்தி வருகிறேன். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்பதை காட்டுவதற்கு, அதற்கான கணக்கு வழக்கினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் வருமான வரி செலுத்தி வருகிறேன், ஆனால் நீதிமன்றத்தில் அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பிரதிவாதிகளுக்கு நான் எத்தனை முறை பணம் கொடுத்து திருப்பி வாங்கியிருக்கிறேன் என்றால் ஒரே முறை தான். பிரதிவாதிகள் எனக்கு உறவினர் தான். ராமமூர்த்தி கிரானைட் தொழில் செய்து வருகிறார். ராமமூர்த்தி கிரானைட் தொழிலில் நஷ்டம் ஏற்பட்டு நொடிந்த நிலையில் இருக்கிறார் என்றால் அவர் பொய் சொல்கிறார். என்னுடைய வருமான வரி கணக்கில் நான் பிரதிவாதிக்கு கொடுத்த கடன் சம்மந்தமாக வருமான வரி கணக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதிகளுக்கு பணத்தை கொடுக்கும் போது அங்கு வேறு யார் இருந்தார்கள் என்றால் எம்.டி. சேகர் என்பவர் அருகில் இருந்தார். என்னுடைய சகோதரி எம்.பி. முனிராஜ் என்பவரும் இருந்தார். எம்.டி. சேகர் என்பவர் எனக்கு உறவினரா என்றால் ஆமாம்.

பணத்தை வாங்கிக்கொண்டதற்கு பின்னிட்டு எந்தவிதமான தொகையும் அவர் திருப்பி கொடுக்கவில்லையா என்றால் கொடுக்கவில்லை. இந்த பணத்ளை கொடுத்த போது, எத்தனை பாண்டுகளில் நான் கையொப்பம் பெற்றுக்கொண்டேன் என்றால் நான்கு பாண்டுகளில் கையொப்பம் பெற்றுக்கொண்டேன். பாண்டுகளின் பின்புறம் அப்போதே நான் கையொப்பம் பெற்றுக்கொண்டேனா என்றால் இல்லை. ஒரு பாண்டிற்கு எத்தனை வருடம்

வாய்தா என்றால் 3 வருடம். நான் 2017ல் வாங்கிய பாண்டிற்கு 2020 வரை அதற்கு காலக்கெடு உள்ளது என்றால் சரிதான். நான் பணத்தை திருப்பி கேட்டு எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் பலமுறை அவரிடம் பணத்தை கேட்டு அந்த பணத்தை அவர் கொடுக்காத காரணத்தினால் எனக்கு அவர் மீது நம்பிக்கை இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் வந்து செல்வைத்து கொடுப்பதாக தாமே கூறினார்களா என்றால் ஆமாம். செல் எங்கு வைத்து எழுதிக்கொடுத்தார்கள் என்றால் என் வீட்டில் வைத்து எழுதிக்கொடுத்தார்கள். செல் எழுதியது எம்.சி. வடிவேல் ஆவார், அவர்களும் எனக்கு உறவினர்கள் தானே என்றால் தூரத்து சொந்தம்.

பாண்டில் எழுதிய கையெழுத்து, பாண்டின் முன்புறம் உள்ள கையெழுத்தும், அதன் கீழே காணப்படும் கையெழுத்துக்களும், பாண்டின் பின்புறம் எழுதியுள்ள கையொப்பமும் ஒரே மை கொண்டு எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மற்ற 3 பாண்டுகளிலும் அதே போல தான் கையொப்பங்கள் காணப்படுகிறது என்றால் சரிதான். ஆகவே நான் பாண்டு எழுதப்பட்ட போதே அதன் பின்புறமும் சேர்த்து கையொப்பங்களை பெற்றுக்கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. ஆகவே 15.12.2019 அன்று பிரதிவாதிகள் ரூ.25,000/- கொடுத்து செல் வைத்து கொடுத்ததாக கூறியுள்ள விவரங்கள் தவறானது என்றால் சரியல்ல. 2019ல் பிரதிவாதிகள் எந்த மேலொப்பமும் செய்துக்கொடுக்கவில்லை, ஆகையினால் அந்த பாண்டு நிலைக்கக்கூடியதல்ல என்று சொன்னால் அது செல்லக்கூடியது தான். 2017-லிருந்து பணம் கொடுக்காதவர்கள் 2019ல் பணம் கொடுத்ததாக நான் சொல்வது தவறு என்று சொன்னால் அவர்கள் பணம் கொடுத்தார்கள். 2019ல் பிரதிவாதிகள் பணம் கொடுத்ததாக அதனை செல் வைத்து கொடுத்ததாக மோசடியாக ஆவணம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4 பாண்டுகளுக்கும் ரூ.25.000/- கொடுத்து செல் வைத்து கொடுத்ததாக சொல்லியிருக்கிறேன், அந்த விவரம் வருமான வரி கணக்கில் காட்டியுள்ளேனா

என்றால் சரியாக ஞாபகமில்லை. என்னிடம் 2010ல் கடன் வாங்கி அந்த கடனை 2015ம் வருடத்திலேயே திருப்பி கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. 2010ல் பணம் கொடுக்கும் போது வெற்று புரோநோட்டில் கையொப்பங்கள் பெற்றுக்கொண்டு, அதன் பின்னிட்டு 2017ல் ரூ.20,00,000/- கடன் வாங்கியதாகவும், 2019ல் அதை செல் வைத்து கொடுத்ததாகவும், ஆவணங்களை மோசடியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு கொடுக்கப்பட்ட பின்னிட்டு, பொது மத்தியஸ்தர்கள் முன்னிலையில் பாண்டை திருப்பி கொடுப்பதாக சொல்லிவிட்டு, இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. செல் வைத்து கொடுக்காததால் அந்த பாண்டுகள் காலவதியாகிவிட்டது, ஆகவே பிரதிவாதிகள் பணத்தை கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.